*புதுச்சேரி அரசு*

*துணைநிலை ஆளுநர் செயலகம்*

**No. LGS/PRO/2024** **17 ஏப்ரல், 2025**

# பத்திரிகை செய்தி

ஒரு நாள் அரசு முறைப் பயனமாக, மீன் வள மேம்பாட்டு திட்டப் பணிகள் தொடக்க விழாவில் கலந்து கொள்ள நேற்று (16-04-2025) காரைக்கால் சென்ற துணைநிலை ஆளுநர் திரு K. கைலாஷ்நாதன், அன்மையில் இலங்கை கடற்படை துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மீனவர் திரு செந்தமிழ் அவர்களை கிளிஞ்சல்மேடு கிராமத்தில் உள்ள அவரது இல்லத்திற்கு நேரில் சென்று நலம் விசாரித்தார்.

சம்பவ விவரம் குறித்து கேட்டறிந்த துணைநிலை ஆளுநர், அவரது மேல் சிகிச்சைக்கு புதுச்சேரி அரசு ஒத்துழைப்பு அளிக்கும் என்று உறுதி அளித்தார்.

அதனைத் தொடர்ந்து பட்டினச்சேரி கிராமத்தில் உள்ள மீனவ சமுதாய மக்களோடு கலந்துரையாடினார். மீனவர்களின் தேவைகளை நிறைவேற்றித் தர மத்திய அரசும் புதுச்சேரி அரசும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருவதாக கூறினார். பட்டினச்சேரியில் அமைய உள்ள மீன் இறங்கு தளம அமைப்பதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு இருப்பதையும் எடுத்துச் கூறினார். மேலும், ஐஸ் கட்டி தொழிற்சாலை திறக்கப்பட்டு இருப்பதையும் நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கான பணிகள் தொடங்கப்படும எனறும் தெரிவித்தார். அதன் பிறகு மீனவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க கிராம மக்களோடு ஒன்றாக அமர்ந்து விருந்து உணவு சாப்பிட்டார்.

முன்னதாக, பட்டினச்சேரி மீனவர்கள் பூரணகும்ப மரியாதையோடு துணைநிலை ஆளுநரை வரவேற்றனர். துணைநிலை ஆளுநரின் செயலர் டாக்டர் மணிகண்டன் மற்றும் காரைக்கால் மாவட்ட ஆட்சியர் திரு சோம சேகர ஆப்பாராவ், மீன் வளத்துறை இயக்குநர் திரு முகமது இஸ்மயில், துணை இயக்குநர் திரு கோவிந்தசாமி ஆகியோர் உடனிருந்தனர்.